# தென்மராட்சிக் கல்வி வலயம், சாவகச்சேரி
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2011
### புவியியல்

தரம் : 10

நேரம்: 3 மணித்தியாலயம்

## பகுதி - I

**இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.**

**ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களிற்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. உயிரினத்தை சூரியனின் புற ஊதாக் கதிரில் இருந்து பாதுகாக்கும் ஓசோன் படை அமைந்துள்ள மண்டலம் ............................................... ஆகும்.
   (1. மாறன் மண்டலம் 2. இடை மண்டலம் 3. படை மண்டலம்)

2. இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட தனித்துவமான பொருளாதார வலயம் ............................................... இற்கு உட்பட்ட பிரதேசமாகும்.
   (1. 200 கடல் மைல் 2. 24 கடல் மைல் 3. 12 கடல் மைல்)

3. கரன், கொக்கு, கண்டல், கட்டு இகிலி போன்ற தாவரங்கள் ....................................................... வகைகளுக்குள் உள்ளடங்குகின்றன.
   (1. கண்டல் தாவர 2. மலைநாட்டு ஈரவலயக் காடுகள்
   3. உலர்வலயக்காடுகள்)

4. உலர் வலயத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுள் ........................................ யும் ஒன்றாக விளங்குகின்றது.
   (1. சேனைப்பயிர்ச்செய்கை 2. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை
   3. விலங்கு வேளாண்மை)

5. மன்னார், அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ............................................... சிறு ஏற்றுமதிப் பயிராக செய்கை பண்ணப்படுகின்றது.
   (1. கிச்சிலிப்பழம் 2. மரமுந்திரிகை 3. கராம்பு)

6. உயிர்ப்பு எரிமலை இல்லாத கண்டமாக ................................ விளங்குகின்றது.
   (1. ஆபிரிக்கா 2. தென்னமெரிக்கா 3. அவுஸ்திரேலியா)

7. யுரேசியன் தகட்டுக்கும் ஆபிரிக்கத் தகட்டுக்கும் இடையில் காணப்படும் சிறு கவசத் தகடுகள்
   (1. பிலிப்பைன் தகடு, கோகோஸ் தகடு 2. கரிபியத் தகடு, ஈரானியத்தகடு
   3. ஈரானியத்தகடு, அரேபியத் தகடு)

8. இடைவெப்ப வலயப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பிரதான பயிர்ச்செய்கை ................................ ஆகும்.
   (1. சோளம் 2. கோதுமை 3. பார்லி)

9. ஆசியாவிற்கு வெளியே ஐரோப்பாவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வடிநிலம் .........................
   (1. நைல வடிநிலம் 2. கங்கை நதி 3. போ நதி வடிநிலம்)

10. இணைப்புக் கைத்தொழிலின் அடிப்படை அம்சமாக ............................................... கொள்ளத்தக்கது
   (1. தொழில் பிரிப்பு 2. இணைக்கப்படும் பொருள் 3. நவீன யுக்தி)



kalvi.lk

**இலக்கம் 11 தொடக்கம் 20 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அது சரியெனின் "ச"யையும் பிழையெனின் "பி" யையும் சுற்றி வட்டம் வரைக.**

11. பறவைகள் கூடு கட்டுவது முதல் அவை பறக்கக் கூடிய ஆகக் கூடிய இடம் வரையான எல்லை உயிர்க் கோளத்தின் உயர் மட்ட எல்லை எனப்படும் (ச / பி)
12. வருட மழைவீழ்ச்சி 1250 - 2000mm வரையும் இம் மழைவீழ்ச்சி டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை வடகீழ் பருவக் காற்றின் மூலமும் பெற்று 30 - 60 நாட்கள் வரட்சியை அனுபவிக்கும் வலயமாக தாழ்நாட்டு ஈரவலயம் காணப்படுகின்றது. (ச / பி)
13. இறப்பர் பயிர்ச்செய்கை அதிகளவில் நடைபெறும் மாவட்டங்களாக கேகாலை, களுத்துறை, காலி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். (ச / பி)
14. ரன்ன, மித்தனிய, தங்கல்ல ஆகியவற்றை இணைக்கும் வலயம் சிறு தென்னை முக்கோண வலயமாகும். (ச / பி)
15. உலகின் உற்பத்திக் கைத்தொழிலில் அண்மைக் காலத்தில் இலத்திரனியல் கைத்தொழில் சிறப்பிடம் பெறுகின்றது. (ச / பி)
16. அதிகளவு இரும்புத் தாது, நிலக்கரியினை இறக்குமதி செய்து இரும்பு உருக்குக் கைத்தொழிலில் இந்தியா ஈடுபடுகிறது. (ச / பி)
17. முனைவுப் பகுதியிலிருந்து மத்திய கோட்டை நோக்கி வரும் நீரோட்டம் வெப்ப நீரோட்டமாகும் (ச / பி)
18. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 27% ஐ வகிக்கும் விவசாயத்துறை பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. (ச / பி)
19. உலகில் இருபது ஓவர் உலகக் கோப்பையை முதன் முதலில் வென்ற அணி இந்தியாவாகும். (ச / பி)
20. குரோமியம் இரும்பு ஆகிய மூலகங்கள் சியல்படையில் பெருமளவில் அடங்கியுள்ளது. (ச / பி)

**21 தொடக்கம் 30 வரையான வினாக்களிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி அதனைப் பூரணப்படுத்துக.**

21. வளிக் கோளத்திற்கும் நீர்க் கோளத்திற்கும் இடையில் நிகழும் நீர்பரிமாற்றம் .............................. எனப்படும்.
22. இந்த ஆண்டு சுனாமியினால் பாதிப்படைந்த யப்பான் ...................................................... கவசத்தகட்டில் அமைந்துள்ளது.
23. இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்குப் போட்டியாக ஏற்றுமதி செய்யும் ஆபிரிக்க நாடு ................................................ ஆகும்.
24. மலேசியாவில் இலத்திரனியல் கைத்தொழில் சிறப்பாக மேற்கொள்ளப்படும் வலயம் ..................................................... எனப்படும்.
25. பல்வேறு வடிவங்களில் கப்பல் கட்டுவதில் முன்னணி வகிக்கும் ஐரோப்பிய நாடு ................................................ ஆகும்.
26. அண்மைக் காலததில் இலங்கையின் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ................................ .................... சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
27. இலங்கையின் சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம் .......................................... யில் அமைந்துள்ளது.
28. நதிகள் கடலோடு கடக்குமிடத்தில் அது பலகிளைகளாகப் பிரிந்து கடலுடன் கலக்கம் இடம் ..................................................... எனப்படும்.
29. இமய மலை, பிரனீஸ் மலை, றொக்கி மலை, அந்தீஸ் மலை போன்ற மடிப்பு மலைகள் ..................................................... காரணமாக உருவானவையாகும்.
30. இலங்கையின் கைத்தொழில்களுள் சபுகஸ்கந்தைப் பிரதேசம் ....................................... கைத்தொழிலுடன் தொடர்புடையது.



kalvi.lk

**31 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிடையே திருத்தமான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுதது அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. ஈரலிப்பான குளிர் காலத்தையும் வெப்ப வரண்ட கோடையையும் கொண்ட பிரதேசத்தில் மேற் கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறை,

 1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை  2. செறிவான பயிர்ச்செய்கை
 3. பரந்தளவு பயிர்ச்செய்கை  4. மத்திய தரை விவசாயம்  (................)

32. தற்போது பருத்தி உற்பத்தியில முன்னணி வகிக்கும் நாடுகள்,

 1. இந்தியா, சீனா  2. பிரித்தானியா, ரஷ்யா
 3. ஐக்கிய அமெரிக்கா  4. பிரித்தானியா, யப்பான்

33. கைத்தொழில் உற்பத்தியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றம்,

 1. மாற்று சக்தி வளப் பாவனை  2. ரோபோக்களின் பாவனை
 3. தொழில்நுட்பத்தை அதிகளவில் பிரயோகித்தல்  4. மேற்கூறிய யாவும்

34. இலங்கையில் நெல் உற்பத்தியானது அதிகளவிலும் குறைந்தளவிலும் செயற்கை பண்ணப்படும் மாவட்டம் முறையே,

 1. யாழ்ப்பாணம், அனுராதபுரம்  2. குருநாகல், யாழ்ப்பாணம்
 3. குருநாகல், நுவரெலியா  4. யாழ்ப்பாணம், நுவரெலியா

35. பல்லேகல, சீதாவாக்கை, பட்டஅத்த, மத்துகம ஆகியவை,

 1. கைத்தொழில் பேட்டைகள்  2. ஆடைத் தொழிற்சாலைகள்
 3. கைத்தொழில் பூங்காக்கள்  4. சுகந்திர வர்த்தக வலயங்கள்

36. கோபே, கியோட்டோ, ஒசாகா ஆகிய கைத்தொழில் மையங்கள் அமைந்துள்ள நாடுகள்,

 1. ஐக்கிய அமெரிக்கா  2. இந்தியா  3. பிரித்தானியா  4. யப்பான்

37. கல்லோயாக் குன்றின் மீது உற்பத்தியாகும் நதித் தொகுதியாக அமைவது,

 1. மல்வத்து ஓயா, கலா ஓயா  2. தெதுறு ஓயா, களனி கங்கை
 3. ஜின் கங்கை, வில் ஓயா  4. கல் ஓயா, ஹெடஓயா

38. இலங்கையின் பெற்றோலிய வளம் காணப்படுவதாக ஆய்விற்குட்படுத்தப்படும் பகுதி,

 1. மன்னார் வளைகுடாப் பகுதி  2. காலிப் பிரதேசம்
 3. மத்திய மலைநாட்டுப் பிரதேசம்  4. அம்பாந்தோட்டை பிரதேசம்

39. 1 : 50,000 இடவிளக்கவியல் தேசப்படத்தில் காணப்படும் அளவிடைக்கேற்ப தேசப்படத்தில் குறிக்கப்படும் 2cm புவியில் காட்டப்படும் உண்மையான தூரம்,

 1. 2Cm  2. 1 Km  3. 2 Km  4. 1/2 Km

40. தாழ்நில உலர் வலயக் காடுகளில் காணப்படும் சிறப்புக்களில் ஒன்றாக அமைவது,

 1. உலர் தன்மைக்கு முற்றாக தன்னை மாற்றிக் கொள்ளும்
 2. கீழ் வளரிகள் இல்லை
 3. இலைகள் மென்மையானவை
 4. மரங்களின் உயரம் 8 - 10m க்கு இடைப்பட்டவை

(40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II - புவியியல்

**முதலாம் வினா அ, ஆ, இ, ஈ கட்டாயமானது.**
**ஏனைய ஆறு வினாக்களில் 3 வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடையளிக்குக.**
**இலங்கைப் படம், உலகப் படம் வழங்கப்படும்.**

**01. அ. இரண்டாம் தவணையின் போது நீர் மேற்கொண்ட வினா விடைத் தொகுப்பு தயாரித்தல் என்ற கணிப்பீட்டுக் கருவியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. விவசாய நடவடிக்கையில் நீர் கற்றுக் கொண்ட விவசாய வகைகளைக் குறிப்பிடுக?
2. ஆசிய வலயத்தில் செறிவான நுகர்வுப் பயிர்ச் செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீகக் காரணிகள் யாவை?
3. பரந்தளவு வர்த்தக விவசாயத்தின் போது மேற்கொள்ளப்படும் நவீன போக்குகள் 2 தருக?
4. விலங்கு வேளாண்மை மேற்கொள்ளப்படும் இரு பிரதான நோக்கங்கள் தருக?
5. பரந்தளவு வர்த்தக விவசாய செறிவான நுகர்வுப் பயிர்ச்செய்கை ஆகிய இரண்டு விவசாயத்தினையும் இரு காரணிகள் கொண்டு ஒப்பிடுக?

(5 x 2 = 10 புள்ளிகள்)

**ஆ. வழங்கப்பட்டுள்ள 1 : 50,000 இடவிளக்கவியல் தேசப்படப் பகுதியைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தேசப்படத்தில் காணக்கூடிய நிர்வாக எல்லைகள் இரண்டினை குறியீட்டுடன் குறிப்பிடுக. (2 புள்ளி)
2. தேசப்படத்தில் நீர் இனங்காணும் பயிர்வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக? (1 புள்ளி)
3. X, Y என எழுத்து இடப்பட்ட A6 வீதியின் நீளத்தினை Km இல் தருக? (1 புள்ளி)
4. இப்படப் பிரதேசத்தில் வடமேல் மூலைக்கருகில் காணப்படும் திருகோணகணித நிலைய உயரம் யாது? (1 புள்ளி)
5. "A" எனும் எழுத்து குறித்து நிற்கும் வடிகாலமைப்பினைப் பெயரிடுக? (2 புள்ளி)
6. கட்டம் D யினுள் காணக்கூடிய பண்பாட்டம்சங்கள் இரண்டினைப் பெயரிடுக? (2 புள்ளி)
7. இப்பிரதேசத்தில் வடபகுதியில், நெற்செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணம் ஒன்று தருக? (1 புள்ளி) (மொத்தம் 10 புள்ளி)

**இ. தரப்பட்ட உலகப்படத்தில் பின்வரும் விடயங்களுக்கான பிரதேசங்களைக் குறித்துப் பெயரிடுக.**

1. வட அமெரிக்காவில் காணப்படும் கட்சன் விரிகுடா
2. ஆசியாவில் காணப்படும் சைபீரியன் சமவெளி
3. மிகப்பெரிய உவர்நீர்க்கடல்
4. பினாட்டுப்போ எரிமலை காணப்படும் இடம்.
5. ஆபிரிக்காக் கண்டத்தில் மேற்குக் கரையை அடையும் நதி

(5 புள்ளி)


**ஈ. தரப்பட்ட இலங்கைப் படத்தில் பின்வரும் விடயங்களுக்கான பிரதேசங்களைக் குறித்துக் காட்டுக.**

1. இறப்பர் ஆராய்ச்சி நிலையம்
2. இலங்கையில் அதிக மழை பெறும் பிரதேசம்.
3. இலங்கையில் தற்போது அபிவிருத்தி நடைபெறும் தென் பிரதேசம்
4. இலங்கையில் கனிய எண்ணெய் காணப்படும் இடம்
5. கிராமிய நீர்மின் திட்டம் கொண்டுவரப்பட்ட மாகாணம்



kalvi.lk

2)





தரப்பட்ட வளிமண்டலத்தின் அமைப்பினைக் காட்டும் படத்தினைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. A, B என்பவற்றினைப் பெயரிடுக. (2 புள்ளி)
2. A, C படைகளின் முக்கிய பயன்கள் எவை? (2 புள்ளி)
3. மனிதன் மீது வளி மண்டலம் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (3 புள்ளி)
4. ஓசோன் படையின் முக்கியத்துவம் யாது? (3 புள்ளி)

3) 1. மத்தியதரை விவசாயத்தில் காணப்படும் முனைப்பான பண்புகள் 2 தருக. (2 புள்ளி)
2. உலகில் பெருந்தோட்ட விவசாயம் மேற்கொள்ளப்படும் பிரதான வலயங்கள் எவை? (3 புள்ளி)
3. பெருந்தோட்ட விவசாயத்தில் நீர் கண்டறிந்த பிரச்சனைகள் மூன்றினைக் கூறுக. (5 புள்ளி)

4)




1. உலகின் பருத்தி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகளை A, B, C எனக் குறிப்பிடப் பட்டுள்ளன. விடையை A, B. C ஒழுக்கில் தருக. (3 புள்ளி)
2 பருத்தி நெசவுக் கைத்தொழில் B நாடு முக்கியத்துவதற்கான பெறுவதற்கான காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)
3. உற்பத்திக் கைத்தொழில் கனிய எண்ணெய் விலையேற்றம் தாக்கத்தினைச் செலுத்துகிறது. மதிப்பிடுக. (4 புள்ளி)

5) வெப்பநிலை, மழைவீழ்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உலகின் காலநிலை வலயங்கள் பாகுபடுத்தப்படுகின்றன.

1. உலகின் வெப்ப அடிப்படையிலான காலநிலை வலயங்கள் எவை?
2. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டினடிப்படையில் அயன மண்டல மழைக் காலநிலையின் உப பிரிவுகள் மூன்றையும் பெயரிடுக. (3 புள்ளி)


3. a. அயன மண்டல மழைக்காடுகளின் இயல்புகள் 2 தருக.



kalvi.lk

b. அயன மண்டல மழைக்காடுகள் அழிவடை வதற்கான காரணங்கள் 3 தருக. (5 புள்ளி)

6. இலங்கையின் தரைத்தோற்ற அமைப்பானது மூன்று மேலுயர்ச்சி அடுக்குகளால் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடப்படுகின்றது.





i. தரப்பட்ட படத்தில் இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகள் காட்டப்பட்டுள்ளன. அதில் 1, 3 எனக் குறிப்பிட்ட தரைத்தோற்றப் பிரிவுகளைப் பெயரிடுக. (2 புள்ளி)

ii. இலக்கம் 3 எனக் குறிப்பிடப்பட்ட வலயத்தில் மனித நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணி களைக் கூறுக. (3 புள்ளி)

iii. வலயம் இலக்கம் 1 இல் மனிதனால் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகள் சூழல் மாசடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று விடயங்களைத் தந்து விளக்குக. (5 புள்ளி)

7)




1. மேலேயுள்ள இலங்கைப் படத்தில் B, A, D குறிக்கும் நெற்செய்கை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களைப் பெயரிடுக. (3 புள்ளி)
2. இலங்கையில் நெற்செய்கையை மேற்கொள்ள சாதகமாக இருந்த காரணிகள் மூன்று தருக. (3 புள்ளி)
3. இன்று விவசாயத்தில் நெல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. காரணந் தந்து விளக்குக. (4 புள்ளி)



kalvi.lk

kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page